**PW1-சுந்தரம்**

**<u>1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது தந்தையின் பெயர் என்னவென்றால் சாமிக்கண்ணு நாடார் ஆகும். எனது தந்தை எந்த இடத்தில் வசித்து வந்தார் என்றால் செருப்பங்கோடு ஆகும். அங்கு அவருக்கு சொந்த வீடு உண்டா என்றால் உண்டு. எனது தந்தைக்கு எவ்வளவு சொத்து உண்டு என்றால் 1 சர்வே எண்ணில் சொத்து உண்டு. அது 20 செண்ட் ஆகும். அந்த சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. எனது தந்தை சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் அது விற்பனை செய்யப்பட்டுவிட்டது. நான் இந்து மதத்தை சார்ந்தவரா என்றால் இந்து மதம் தான். எனது தாத்தா காலம் முதல் நாங்கள் இந்து மதத்தை தான் பின்பற்றி வருகிறோம் என்றால் சரிதான். எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை நான் பிறந்த இரண்டு வருடத்தில் இறந்துவிட்டார். எனது தந்தையுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் இரண்டு பேர்.

2. எனது தந்தையின் சொத்து பாகப்பிரிவினையில் கிடைத்ததா அல்லது வாங்கியதா என்றால் வாங்கியதாக சொன்னார்கள். எனது தந்தை அவரது சொத்தை வாங்கியதற்கான ஆவணத்தை பார்த்துள்ளீரா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ய வேண்டிய தேவையில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தையின் சொத்து பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் பாகம் பிரிக்கப்பட்டது . மேற்படி பாகப்பிரிவினை பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் நடைபெற்றதாக, நீதிமன்றம் மூலம் பாகப்பிரிவினை செய்யப்பட்டதா அல்லது வாக்கால் பிரித்துக்கொண்டோமா என்றால் நாங்களாகவே வாக்கால் பாகம் செய்துகொண்டோம். எப்பொழுது பிரித்தோம் என்றால் நான் சிறு வயதாக இருக்கும் போது பிரித்தோம். சுமார் 45 வருடங்களுக்கு முன்பு பிரித்தோம். எனக்கு தற்போது எத்தனை வயது ஆகிறது என்றால் 62 வயது ஆகிறது.

3. வாக்கால் பாகம் செய்தபோது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் எனது அம்மா மற்றும்

**PW1-சுந்தரம்**

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது சகோதரர்கள் இருந்தோம். எனது தந்தைக்கு 6 ஆண் பிள்ளைகள் மற்றும் 2 பெண் பிள்ளைகள் ஆகும். எனக்கு ஒதுக்கப்பட்ட கண்டத்தில் நீளம் மற்றும் அகலம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் என்னென்ன மரங்கள் இருந்தது என்றால் மா மற்றும் முந்திரி மரங்கள் இருந்தது. எனது தந்தை சொத்தின் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டது போன்று 2 ஆம் பிரதிவாதியின் கணவரும் எனது அண்ணனுமான தங்கமணிக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் என்னென்ன மரங்கள் இருந்தது என்றால் மா மற்றும் முந்திரி மரங்கள் ஆகும். எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தை நான் விற்றுவிட்டேன். எனது அண்ணன் தங்கமணிக்கு ஒதுக்கிய இடத்தை அவர் விற்பனை செய்துவிட்டாரா என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சொத்தை நான் எப்பொழுது வாங்கினேன் என்றால் 1991 ஆம் ஆண்டு வாங்கினேன்.

4. வழக்கு சொத்துடன் சேர்த்து வாங்கிய 15 சென்டின் நீளம் மற்றும் அகலம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 15 சென்டை வாங்கும்போது அளந்து பார்த்து தான் வாங்கினேனா என்றால் ஞாபகம் இல்லை. 1 ஆம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 15 சென்ட் அல்ல என்றும் தவிர 20 சென்ட் என்று கூறப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் அது பொய்யாகும். 1-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 15 சென்ட் அல்ல 20 சென்ட் என்று கூறப்பட்டுள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் எத்தனை வகுப்பு படித்துள்ளேன் என்றால் 1-ஆம் வகுப்பு படித்துள்ளேன். 1-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் என்ன விவரம் உள்ளது என்று நான் படித்து பார்க்கவும் இல்லை மற்றும் எனது வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பிக்கவும் இல்லை என்றால் சரிதான்.

**PW1-சுந்தரம்**

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. நான் கிரையம் பெற்ற சொத்தில் பாதி தான் கிடைக்குமா என்றால் சரிதான். மேற்படி 15 சென்டை விட கூடுதலாக இருக்கும்பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் கூடுதலாகவும் அதே சமயத்தில் 15 சென்டிற்கு குறைவாக இருக்கும்பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் குறைவாகவும் கிடைக்குமா என்றால் சரிதான். எனக்கும் எனது அண்ணண் தங்கமணிக்கும் எப்பொழுது பாகப் பிரிவினை நடைபெற்றது என்றால் 1991-ஆம் ஆண்டு இறுதியில் நடைப்பெற்றது நாள், மாதம் தெரியாது. 1991-ஆம் வருடம் கிரையம் வாங்கும்போது தனித்தனியாக கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை செய்யும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் எனது அண்ணனும் இருந்தோம். ஒவ்வொருவருக்கும் தலா 7 1/2 சென்ட் வீதம் பிரித்துக்கொண்டோம். ஆனால் அளந்து பார்த்து வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்தபோது எல்கையை வறையறுத்தோமா என்றால் எல்கை கற்கள் போடப்பட்டது.

6. எனது அண்ணன் எப்போது இறந்தார் என்றால் 1994-ஆம் வருடம் இறந்தார். எனது அண்ணன் மனைவி பெயர் என்னவென்றால் அவருக்கு 2 மனைவி ஆகும். முதல் மனைவி பெயர் கனகா ஆகும். இரண்டாவது மனைவி பெயர் மணிமேகலை ஆகும். எனது அண்ணனுக்கும் முதல் மனைவிக்குமிடையே எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1986-ஆம் வருடம் ஆகும். மேற்படி இருவருக்கும் இந்து சமய முறைப்படி தான் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். மேறபடி திருமணத்தின் மூலம் தான் 3-ஆம் பிரதிவாதி பிறந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கனகா தற்போதும் உயிரோடு தான் உள்ளார் என்றால் சரிதான். எனது அண்ணன் தங்கமணிக்கும் முதல் மனைவிக்கும் இடையே விவாகரத்து நடைபெற்று விட்டதா என்றால் எனது அண்ணன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்து நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார். மேற்படி விவாகரத்து வழக்கின் மனு எண் தெரியுமா என்றால் தெரியாது.

**PW1-சுந்தரம்**

**<u>1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

7. எனது அண்ணனின் 2-வது மனைவியான மணிமேகலைக்குமிடையே எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1991-ஆம் வருடம் இந்து சமய முறைப்படி திருமணம் நடைபெற்றது. எனது அண்ணன் முதல் மனைவியை விவகரத்து செய்யாலேயே மணிமேகலையை இரண்டாவதாக திருமணம் செய்தார் என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி பொருண்மையை நிரூபிக்க எனது தரப்பில் ஆவணம் ஏதும் உள்ளதா அவர்களிடம் இருக்கும் என்னிடம் தற்போது இல்லை. அவ்வாறெனில் மேற்படி ஆவணங்களை சம்மந்தபட்ட அலுவலகங்களில் இருந்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னால் வாங்க இயலாது அவர்களால் வாங்க முடியும். நான் கூறுவது போன்று எனது அண்ணனுக்கும் மணிமேகலைக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் மேலும் மேற்படி திருமணத்தின் மூலம் மேற்படி அவர்களுக்கு குழந்தை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பாதியுடன் நிறுத்திவைக்கப்படுகிறது. )**

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**இரணியல் (பொறுப்பு)**